இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -7


# நேர்மை நெறி


ஜூலை'2021

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)


(Reg.No.349/2001)


ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யல்லாம் செயல்

(NERMAI NERI)


Rs.10


## ஊழலாலும் அதிக வரி விதிப்பாலும் விலைவாசி உயரும்




## ஊழல் = சாபம்


PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, "நம்பகம்",
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023

Cell:8778312823

e-mail:acmchennai2001@yahoo.com

website:anticorruptionchennai.com

## தலைவர் மடல்

அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே !

வணக்கம். இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கொரானா கட்டுப்பாடு காரணமாக, நாமக்கல் மாவட்டத்தில், எமது சொந்த கிராமத்தில் இருந்ததால் இம்மடலை சென்ற மாதம் எழுதமுடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எச்சரிக்கை:** அன்பார்ந்த உறுப்பினர்களே, நமது இயக்கம் ஏற்கெனவே பல நிர்வாகிகளை/உறுப்பினர்களை கோவிட்-19 வைரசுக்கு பலி கொடுத்துவிட்டது. கொரோனாவால் இனி ஒரு பலி கூட இருக்கக்கூடாது. தற்போது கோவிட்-19 வைரஸ் ஆனது பல்வகையில் வடிவம் எடுத்து இரண்டாவது பேரலையாக கோரத்தாண்டவம் ஆடி முடித்துவருகிறது. மேலும், இதன் வீரியம் எப்போது எப்படி மாறும் என்பது மருத்துவ உலகுக்கே சவாலாக உள்ளது. மூன்றாவது அலை இன்று வரும்! நாளை வரும்!! என்று மருத்துவ வல்லுனர்கள் அறிக்கை விட்டு வருகின்றனர். எனவே, ஒவ்வொரு உறுப்பினரும், கோவிட்-19லிருந்து தம்மையும் சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள, அரசு தடுப்பு ஊசியை உரிய இடைவெளியுடன், இது வரை போடாதவர்கள், உடனடியாக போட்டுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தடுப்பூசி போட்டுக் கொண்டாலும், தொடர்ந்து அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு நெறிமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுகிறோம்.



**கொரானா என்னும் கொடிய நோயும் திருந்தாத அரசியல் வாதிகளும்:** சில மாதங்களுக்கு முந்தைய நேர்மை நெறியில் கொரொணா RT-PCR Test Kit கருவிகளை எவ்வாறு அதிக விலைக்கு வாங்க அதிமுக அரசு முயன்றது என்பதையும், இது சம்பந்தமான வழக்கில், எவ்வாறு தலையிட்டு டெல்லி உயர்நீதிமன்றம் விலையை குறைத்தது என்பதையும், அதனால் அந்த சோதனைக்கருவிகளேயே வாங்காமல் தமிழக அரசு விட்டு விட்டது என்பதையும் பார்த்தோம். ஆனால் அரசியல்வாதிகள் இன்னொரு வழியை கண்டு பிடித்துவிட்டனர். அரசு கஜானா காலியான நிலையிலும் கொரோனாவால் அரசு பணம் மேலும் காலியாகும் வகையிலேயே அரசின் கொள்கை முடிவுகள் இருப்பது வருத்தமளிக்கிறது. பல லட்சம் அரசு ஊழியர்கள் ஒரு வேலையும் செய்யாமல் சம்பளம் வாங்கி வரும் நிலையில், கொரானாவுக்காக தற்காலிக அடிப்படையில் தினக்கூலி ஊழியர்களை சென்னை மாநகராட்சி நியமித்து அவர்களுக்கு அனுதினம் ரூ.500/- வரை ஊதியம் வழங்குவதாக தெரிகிறது. இதற்குப்பதிலாக, அலுவலகம் செல்லாமல் ஒரு வேலையும் செய்யாமல் சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை பயன்படுத்தி இருப்பின் பல நூறு கோடி ரூபாய் செலவு தடுக்கப்பட்டிருக்கும். இதற்கும் ஊழல் தான் காரணமாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுகிறது. இதில் கமிஷன் பெறப்படுவதாக வதந்திகள் நிலவுகின்றன. ஆக அரசின் நிதியை இப்படி வீணடித்துவிட்டு மக்கள் தலையில் கடன் சுமையை சுமத்துகிறது அரசு. இதில் ஊழல் ஒரு புறம் இருக்க, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை இவ்வாறு பயன்படுத்தினால் அவர்களின் ஓட்டு போய்விடும் என்று அதிமுக அரசு அஞ்சியிருக்கலாம். ஆனால் இந்த திமுக அரசு அவ்வாறு பயப்படத் தேவையில்லையே எனப்பார்க்கின், இவர்களுக்கும் அடுத்து வரக்கூடிய, உள்ளாட்சித்தேர்தல் பயம் உள்ளது என்கின்றனர். ஆக, அரசமைப்பு சட்டப்படி விருப்பு வெறுப்பின்றி முடிவுகளை எடுப்பேன் என்று சத்தியப் பிரமாணம் செய்த அமைச்சர்கள், அதை மீறி சுயலாபம் கருதி மேற்கண்டவாறு முடிவெடுப்பதிலிருந்து ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்பது புலனாகிறது.

**தொடரும் ஊழல்:** சென்ற தேர்தலின் போது இன்றைய முதல்வர் அவர்கள் அதிமுக அரசை அரசு பணிகளின் ஒப்பந்த மதிப்பில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் லஞ்சம் பெறுவதாக ஊர் ஊராக பிரச்சாரம் செய்தார். அதிமுக அர்சை பர்சன்டேஜ் அரசு என்று கிண்டல் செய்தார். தாம் ஆட்சிக்கு வந்தால் இதை ஒழிப்போம்; நேர்மையான ஆட்சி தருவோம் என்று முழங்கினார். அதிமுக ஆட்சியில் பர்சென்டேஜ் தொடங்கியது 1991ல் செல்வி. ஜெயலலிதா தலைமையில் அமைந்த ஆட்சியில தான் அதை ஆரம்பித்து வைத்தவர் இன்றைய திமுக அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்களே. யாம் நெடுஞ்சாலைத்துறையில் பணியாற்றிய போது இதை அறிவோம். இது குறித்து, அதிமுக ஆட்சியில் நடைபெற்ற ஊழல் குறித்து ஒரு வெள்ளை அறிக்கையே அன்றைய திமுக அரசிடம் கொடுத்தோம். ஒரு டெண்டரில் 10 அல்லது 15 சதவீதம் என்ற அதிமுக அடித்த கொள்ளைக்குப் பதிலாக ஒரு வேலையில் 100 சதவீதத்திற்கும் மேலாகவே ஊழல் செய்யும் வகையில் திட்டம் தீட்டி அதை வெற்றிகரமாக செயல்படுத்தியும் விட்டது அன்றைய திமுக அரசு. அதாவது, சுமார் 75 கோடி ரூபாய் மதிப்புள்ள 106 பால வேலைகளுக்கு அரசு மதிப்பீடு 200 கோடி ரூபாய் என்று எந்தவித தொழில்நுட்ப மதிபீடே தயாரிக்காமல் நிர்ணயம் செய்து அந்த 75 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகளை சுமார் 165/175 கோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டு ரூ.35/25 கோடி சேமிப்பு செய்ததாக அறிக்கையும் விட்டு விஞ்ஞானப் பூர்வமாக

மாபெரும் ஊழலை அரங்கேற்றியது அன்றைய திமுக அரசு.(1996-2001). இது குறித்து அரசின் ஊழல் தடுப்பு இயக்குனரகம் உட்பட அனைவர்க்கும் புகார் அளிக்கப்பட்டது. வழக்கம் போல் எந்த நடவடிக்கையும் இல்லை. சுதந்திரப் போராட்ட தியாகி திரு.நெல்லை ஜெபமணி அவர்கள் இந்த ஊழல் மீது நடவடிக்கை எடுக்க சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்குப் போட்டும் அதை நடத்திய வழக்கறிஞர் வழக்கை அவருக்குத்தெரியாமல் வாபஸ் வாங்கிவிட்டார். வழக்கறிஞர் செய்த இந்த நம்பிக்கைத் துரோகம் தான் அன்னாரை மனவேதனைப்பட வைத்து உயிர் பிரிய வைத்தது என்று அவரது மகன் கூறி வருகிறார். ஆனால், இது போன்ற வழக்கை வாபஸ் வாங்க அனுமதித்த உயர்நீதிமன்றம் தான் தவறு செய்துவிட்டதாக யாம் கருதுகிறோம். ஆக அரசு டெண்டர்களில் பர்சென்டேஜ் ஊழல் தொடர்வது ஊரறிந்த உண்மை.

தற்போது, திரு.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள ஆட்சியிலும், அதிமுக ஆட்சியில் டெண்டருக்கு கமிசன் கொடுத்திருந்தாலும், அதிமுக ஆட்சியில் செய்து முடிக்காமல் தற்போது திமுக ஆட்சியில் நடக்கவுள்ள மீதி வேலைகளின் மதிப்பில் 2 முதல் 4 சதவீதம் வரை லஞ்சம் கேட்பதாக பேச்சு எழுந்துள்ளது. நல்லாட்சி தருவதாக வாக்குறுதி அளித்து வெற்றி பெற்ற திரு.ஸ்டாலின் அவர்களுக்கு தெரியாமல்தான் இது போன்ற முயற்சி நடக்கிறது என்றுதான் யாம் சந்தேகிக்கிறோம். எனவே, தமிழகத்துக்கு விடியல் தருவதாக மக்களுக்கு வாக்களித்து வெற்றிபெற்ற திரு,ஸ்டாலின் அவர்கள் இது போன்ற கயமிகளை கண்டறிந்து நடவடிக்கை எடுத்து மக்களுக்கு தேர்தலின்போது வக்களித்தபடி தூய்மையான, நேர்மையான அரசு வழங்கி தமிழகத்தை பேரிருளில் இருந்து மீட்க இரு கரம் கூப்பி வேண்டுகிறோம் !

**ஒன்றுபடுவோம்! சட்டப்படி போராடுவோம்!! வெற்றிபெறுவோம்!!!.**

நன்றி! வணக்கம்!

**அன்புடன்,**

**(ந.சுப்ரமனியன்)**

---


**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

திரு **N** சுப்ரமணியன், தலைவர் **: 9444274352**

திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் **: 87783 12823**

திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் **: 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**

**Website : anticorruptionchennai.com**

# சுவிஸ் வங்கியில் உள்ள இந்திய கருப்புப்பணம்

**V. கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**

ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்தில் உள்ள வங்கிகள் கறுப்பு பணத்தை பதுக்கி வைப்பவர்களின் சொர்க்கமாக திகழ்கின்றன. நம் நாட்டில் முறைகேடான வழிகளில் பணம் ஈட்டியவர்கள் அதற்கு வரி செலுத்தாமல் ஏமாற்றுவதற்காக சுவிட்சர்லாந்து வங்கிகளில் பணத்தை பதுக்கி வைக்கும் நடைமுறை நீண்ட காலமாக உள்ளது.

பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பின்பு இந்தியாவில் இருந்து சுவிஸ் வங்கியில் பதுக்கப்படும் பணம் அதிகரித்துள்ளது. இந்தியர்கள் மிகவும் அதிக அளவில் கருப்பு பணத்தை பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பின்பு சுவிஸ் வங்கியில் பதுக்கி இருக்கிறார்கள். 2016ம் வருடம் நவம்பர் மாதம் பணமதிப்பிழப்பு நடவடிக்கை செய்யப்பட்டது. சுவிஸ் வங்கியில் 2017ல் ஆண்டில் எப்போதும் போடப்படுவதை விட 50 சதவிகிதம் அதிகமாக இந்தியாவில் இருந்து பணம் போடப்பட்டுள்ளது. இது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 2017ல் இந்தியாவில் இருந்து பணம் போட்டவர்களின் எண்ணிக்கை 2016ல் போடப்பட்டதை விட 50 சதவிகிதம் அதிக ஆகும். 2016ல் சுவிஸ் வங்கியில் 3500 கோடி ரூபாய் போடப்பட்டுள்ளது. 2017ல் மொத்தம் 7000 கோடி ரூபாய் பணம் இந்தியாவில் இருந்து சுவிஸ் வங்கியில் போடப்பட்டுள்ளது. இது பணமதிப்பிழப்பு காரணமாக கருப்பு பணம் ஒழிக்கப்படவில்லை என்பதை தெளிவாக காட்டுகிறது. 2018ல் இது இன்னும் அதிகரித்துக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நமது நாட்டு நிதி அமைச்சகம் சுவிஸ் வங்கியில் உள்ள இந்திய கருப்புப்பணம் ஏறுமுகமாக இருப்பதை மறுத்தது. ஆனால், சுவிஸ் அரசின் அதிகார வட்டாரங்களின் மூலம் வெளி வந்த செய்திகள் இந்திய கருப்புப்பணம் 2020 ம் ஆண்டின் கடைசியில் ரூபாய் 20,700 கோடிக்கும் (2550 மில்லியன் CHF) அதிகமாக உள்ளதாக அறிவிக்கின்றன. இதுவே 2019ம் ஆண்டின் முடிவில் ரூபாய் 6,625 கோடியாக (899 மில்லியன் CHF) இருந்தது. இது நமது நாட்டின் 13 வருட அதிக பட்ச தொகையாகும். இவை அனைத்தும் நமது நாட்டின் மிகப்பெரிய செல்வந்தர்களின் கருப்புப்பணமாகும்.



இந்தியா, சுவிட்சர்லாந்து நாடுகளிடையே வரி சார்ந்த ஒப்பந்தத்தின்கீழ் தகவல்களை பரிமாறிக் கொள்ள வழியேற்பட்டுள்ளது. இதன்படி அந்நாட்டு வங்கிகளில் கருப்புப் பணத்தை பதுக்கி வைத்துள்ள இந்தியர்களின் விவரத்தை சுவிஸ் அரசு அளித்துள்ளது. தங்கள் நாட்டில் கணக்கு வைத்துள்ள இந்தியர்களின் விவரங்களை சுவிஸ் அரசு மத்திய அரசுக்கு ஏற்கனவே அனுப்பியுள்ளது.
சுவிட்சர்லாந்து வங்கிகளில் கருப்புப் பணம் பதுக்கி வைத்துள்ளவர்களின் விவரத்தை ரகசிய தன்மை காரணமாக வெளியிட முடியாது என நமது நாட்டு நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.. இந்த விவரங்களை வெளியிடுமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆர்டிஐ மனுவுக்கு நமது நிதி அமைச்சகம் பதில் தர இயலாது என தெரிவித்துள்ளது. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரிவு 8 (1)-ன் கீழ் நாட்டின் இறையாண்மை, நாட்டின் பாதுகாப்பு, உத்திசார் அடிப்படையிலான அணுகுமுறை, அறிவியல் சார்ந்த,பொருளாதாரம் சார்ந்த மற்றும் வெளியுறவு சார்ந்த விஷயங்களாயிருப்பின் தகவல்களை தர வேண்டியதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2020ல் பணமாக டெப்பாசிட் செய்யப்படும் தொகையின் அளவீடு குறைந்துள்ள நிலையில், பத்திரங்களாக முதலீடு செய்யப்பட்டு உள்ள தொகை அதிகரித்துள்ளது எனச் சுவிஸ் மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

கருப்புப் பணம் இதில் எவ்வளவு அளவு பணம் என்பது சுவிஸ் வங்கிகளுக்குத் தெரியாது. ஆனால், இந்திய அரசாங்கத்துக்கு இவை அனைத்தும் தெரியும். இதேபோல் 2018 முதல் சுவிஸ் மற்றும் இந்தியா இடையில் வரி மற்றும் பண இருப்பு அளவீடு குறித்த தரவுகள் வெளியிட ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது.

---

**<u>நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்</u>**

## <u>அதிபர் குடித்த கஞ்சி</u>

கம்யூனிஸ்ட் புரட்சியாளர், வி. லெனின் அவர்கள் ஜார் மன்னரின் கொடுங்கோலாட்சியை எதிர்த்து புரட்சி செய்து ரஷ்யக் குடியரசைத் தோற்றுவித்தவர் ஆவார்.

ஒரு சமயம் அவர் ஓட்ஸ் தானியத்தால் தயாரிக்கப்பட்ட கஞ்சியைக் குடித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரது நண்பர்கள் சிலர் அங்கு வந்தனர்.

அவர்களில் ஒருவன் லெனினைப் பார்த்து, “புரட்சியாளர்களின் தலைவராகிய தாங்கள் ஓட்ஸ் கஞ்சி குடிப்பதா?' என்று ஆச்சரியமாகக் கேட்டான். அதைக்கேட்ட லெனின் புன்னகைத்தார்.

“ என் நாட்டு மக்கள் எப்பொழுது ரொட்டி சாப்பிடுகிறார்களோ, அப்போது தான், நானும் ரொட்டி சாப்பிடுவேன். அது வரை எனக்கு கஞ்சி மட்டும் தான் உணவு. தலைவன் என்றாலும் தனி சலுகைகள் எடுத்துக்கொள்ளக்கூடாது. மக்களுக்கு என்ன வாழ்வோ அது தான் தலைவனுக்கும். அப்படி தன்னை வகுத்துக் கொள்பவனே உண்மையான தலைவனாக இருக்க முடியும்!” என்றார் லெனின் .

மக்கள் நலனுக்காகப் போராடும் ஒரு தலைவன், எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்த லெனினை எண்ணி, அவரது நண்பர்கள் வியப்பின் எல்லக்கே சென்றனர்.

# வடநாட்டு தொழிலாளர்கள்

வடநாட்டு தொழிலாளர் தமிழ்நாட்டில் பெருக காரணம் என்ன? - நேர்மையான அலசல் ! கொரனா வந்து 3 மாதங்களாகிவிட்டது. அந்த நோய் பற்றிய அன்றாடச் செய்திகள் அனைத்தும். பழைய செய்திகளாகிவிட்டது.. மக்களுக்கும் பழகிவிட்டது......இந்தியாவில் டிசம்பருக்குள் பெரியளவில் உயிரிழப்புகள் ஏற்படலாம் என்று செய்திகள்.

இப்போது வட இந்தியர்கள் பற்றிய விவாதம் நமக்குள் ஓடிக்கொண்டிருக்கிறது... பான்பராக் வாயர்கள், படிக்காத அறிவுகெட்டவர்கள்.. அங்கே ஓட்டு போட்டுவிட்டு இங்கே பானிபூரி விற்க வந்துவிடுகிறார்கள்,....... மதவெறியர்கள் என்றெல்லாம் பல பதிவுகளை காண முடிகிறது... இன்று அவர்கள் செய்த.... பங்கேற்ற தொழில்கள்..... வேலைகள்..... ஸ்தம்பித்து நிற்கின்றன அல்லது போதிய வேலையாட்கள் இன்றி ஆள்பற்றாக்குறையுடன் நடக்கிறது......

அவை ஒருபக்கம் இருக்கட்டும்...... முதலில் நம்மை பற்றிய சுயபரிசோதனையில் இருந்து தொடங்குவோம்... கடந்த 5-10 ஆண்டுகளாக தமிழகத்தில் மிக சிக்கலான சூழ்நிலை நிலவுகிறது... இதை நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நேரத்தில் அனுபவித்திருப்போம்...ஒரு பக்கம் வேலை இல்லை என்று திண்டாட்டம்.. இன்னொரு பக்கம் வேலைக்கு சரியான ஆள் கிடைக்கவில்லை என்று திண்டாட்டம்... எந்த படிப்பு படித்தவனுக்கும் நல்ல வேலை கிடைக்கவில்லை என்ற புலம்பல்.. எந்த தொழில் நடத்தவும் சரியான ஊழியர்கள் கிடைக்கவில்லை என்ற விசும்பல்... பல தொழில் நிறுவனங்கள் சிறிய மற்றும் பெரிய முதலீடுகளில் தொடங்கப்பட்ட வேகத்தில் மூடப்படுகின்றன... எங்கு பார்த்தாலும் "எந்த பிசினசும் சரியில்லைங்க" என்ற பேச்சுகள்... இதற்கு நடுவில் கொரனாவால் தொழிற்சாலைகள் மூடப்பட்டு.....வேலையிழந்தோர் பல லட்சம் இதற்கு பிண்ணனியில் என்னென்ன காரணங்கள் இருக்க முடியும் என்பதை என் சிற்றறிவுக்கு எட்டிய வரையில் தேடியுள்ளேன்...

1. **மது** : கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்புவரை இலைமறை காய்மறையாக இருந்த மதுப்பழக்கம் இப்போது காபி, டீ போல சாதாரண ஒன்றாகிவிட்டது... தினமும் மாலை ஆகிவிட்டால் பாட்டிலை தொடாமல் இருக்க முடியாது என்ற நிலையில் மிக அதிக எண்ணிக்கையில் ஆண்களும் அவர்களுக்கு போட்டியிட்டு பெண்களும் மது பழக்கத்திற்கு ஆளாகியிருக்கின்றனர்... உலகிலேயே திறன் வாய்ந்த பணியாளர்கள் இருந்த தமிழகத்தில் இன்று குடிகாரர்கள் நிறைந்து , உற்பத்தி திறன் (productivity) மிகவும் குறைந்துவிட்டது... குடி நோயாளிகளால் எந்த வேலையையும் நேர்த்தியாகவோ , குறிப்பிட்ட பணி நேரமோ செய்ய முடிவதில்லை.. குறிப்பாக அமைப்புசாரா தொழிலாளர்கள் , கட்டுமானம் உள்ளிட்ட தொழில்களில் ஈடுபடுவோரால் சராசரி 8 மணிநேர பணியை கூட செய்ய முடிவதில்லை... அதிகம் போனால் 4 மணிநேரம் வேலை செய்கிறார்கள்.. அதற்கு ₹1000 கூலி கேட்கின்றனர்... வீட்டுக்கு ₹500, தனக்கு இருவேளையும் மது , சிகரெட் உள்ளிட்டவற்றுக்கு ₹500 என்று... இது மட்டுமல்லாமல் மலட்டுத்தன்மை, பாலியல் குறைபாடுகள் ஏற்பட்டு, முறையற்ற உறவுகள் பெருகுவதும், இதனால் கவனிக்கப்படாத குழந்தைகள் சமூக விரோதிகளாகவும் உருவாகும் மிகப்பெரிய ஆபத்தை நோக்கி நம் தமிழகம் வேகமாக பயணித்துக்கொண்டு இருக்கிறது...

2. **மின்வெட்டு:** 2009-11 காலகட்டத்தில் நிலவிய அபரிமிதமான மின்வெட்டினால் பல சிறு,குறு தொழில்கள் முற்றிலும் நசிந்து அவர்களில் பலர் வெளி மாநிலங்களுக்கு பிழைப்பு

தேடி இடம் பெயர்ந்தனர். சிலர் வேறு வேலைகளுக்கு சொற்ப சம்பளத்திற்கு சென்றனர்.. சிலர் கவலையில் குடி நோயாளிகளாகிவிட்டனர்... மின்சாரம் சீரடைந்த பின்னரும் தொழில் தொடங்க பயந்து பணிக்கு செல்வதே பாதுகாப்பானது என்று இருப்பவர்களும் உண்டு.

3. **நூறுநாள் வேலை:** இந்த திட்டம் விவசாயம் உள்ளிட்ட எவ்வித வாழ்வாதாரமுமே இல்லாத மாவட்டங்களுக்கு அவசியம் தேவை... ஆனால் தமிழகத்தில் பெரும்பகுதி மாவட்டங்கள் ஓரளவு வளர்ந்தவை.. இங்கு இத்திட்டத்தை முறையான திட்டமிடல் இல்லாமல் செயல்படுத்தியதால் காலை 10 மணிக்கு போய்விட்டு 2 மணிக்கு வந்துவிடலாம், வீட்டுக்கு தேவையான விறகுகளை வெட்டிக்கொள்ளலாம்.. வேறு எந்த வேலையும் இல்லை.. ₹150 அக்கவுண்டுக்கு வந்துவிடும் என்ற நிலையால் சிறிய டீக்கடைகள் முதல் பெரிய நிறுவனங்களில் அடிநிலை உதவியாளர் பணிகளுக்கு ஆட்கள் கிடைக்காமல் தடுமாறும் நிலை ஏற்பட்டது...

4. **இலவசங்கள்:** அரசு தரும் இலவச பொருட்களும், ஊரக வேலைவாய்ப்பு திட்டமும் மக்களை உழைக்க விரும்பாத, சும்மாவே காசு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் சோம்பேறிகளாக்கிவிட்டனர்..

5. **நம் கல்விமுறை மற்றும் கல்வியின் தரம்**.: அது பட்டதாரிகளை (scholars) உருவாக்குகிறதே தவிர திறன்மிக்கவர்களை (skilled) உருவாக்குவதில்லை...

இத்தகைய காரணங்களால் தமிழகம் மிகமிக ஆபத்தான நிலையை நோக்கி பயணிக்கிறது... சமீபத்தில் தொழில் தொடங்கி நட்டமடைந்து தொழிலை விட்டவர்களிடம் விசாரித்து பாருங்கள்.. 10ல் 8 பேர் ஊழியர் மற்றும் சம்பள பிரச்சினைகளாலேயே தொழில் நட்டமடைந்ததாக சொல்லுவார்கள்..

தொழில் நடத்தியே ஆகவேண்டிய கட்டாயமுள்ளோர், வேறு வழியின்றி தங்களுக்கு தேவையான வேலையை ஓரளவு குறைவான சம்பளத்தில் (தமிழ்நாட்டவரை ஒப்பிடுகையில்) கிடைக்கும் வட நாட்டவரை அழைத்து வந்து இங்கே வேலைக்கு வைத்துக்கொள்கின்றனர்... ஓட்டல் முதல் கட்டுமான துறை வரை இதுதான் நடக்கிறது... தமிழ் சமையல்காரர், கொத்தனார், ஓட்டுனர்கள் ஒருநாளைக்கு பெறும் ₹850-1000 சம்பளத்திற்கு , (பெரும்பாலும் அடிக்கடி லீவு போடும் பழக்கமுடையவர்கள்) செய்யும் வேலையை விட வடநாட்டவர்கள் ...... 2 மணிநேரம் அதிகமாக ₹500-600 சம்பளத்திற்கு செய்கிறார்கள்.. தங்க வீடு, சாப்பாடு கொடுத்துவிட்டால் போதுமானது.. வருடத்திற்கு ஒருமுறை ஒருமாதம் லீவு கொடுத்தால் போதும். இதுதான் பெயிண்டர், ஆசாரி, பிளம்பர், எலக்ட்ரீசியன் வேலைகளுக்கும்...

நம் ஆட்கள் கேலி செய்வதை போல அவர்கள் பானிபூரி மட்டுமே விற்க இங்கே வரவில்லை... சொல்லப்போனால் இங்கு உள்ள 100% பானிபூரி வண்டிகளில் 30% கூட வட இந்தியர்களுடையதல்ல.. 70%க்கும் மேற்பட்ட வண்டிகளில் தமிழர்களே பானிபூரி விற்கிறார்கள்...

**கடைசியாக..**

நம் தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளில் பெருமளவு மக்கள் மனநிலையில் ஆபத்தான மாற்றம் ஏற்பட்டுள்ளது... வேலையே செய்யக்கூடாது, சும்மாவே எல்லாம் கிடைக்க வேண்டும், சும்மாவே பணம் கிடைக்க வேண்டும், சும்மாவே சுகபோகமான வாழ்வு கிடைக்க வேண்டும், தினசரி குடிக்க வேண்டும் என்றெல்லாம் மாற்றங்கள்... இவற்றை பற்றி அக்கறை கொள்ள வேண்டிய அரசுகளே சாராயத்தை விற்று லாபத்தை தேடுவதுதான் உச்சபச்ச கொடுமை. கற்றோர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள் எல்லோரும்

இது குறித்து சிந்தித்து இந்த சமூக மனநிலையை பிடித்துள்ள நோயை மாற்ற வழி தேடினால் மட்டுமே தமிழினம் தப்பிப்பிழைக்கும்...

ஆம்.. தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவனுக்கோர் குணமுண்டு# என்னவாயிற்று தமிழர்களுக்கு?

பணப்புழக்கம். ஏன் இங்கு இல்லை.

இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் பணப்புழக்கம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது இதற்கு காரணம் ஏன் எது?
தமிழர்கள் உடல் உழைப்பை விரும்புவதில்லை.... அதோடு சாராயம் மது மற்றும் சோம்பேறித்தனம் லேசான வேலையை செய்ய, உழைக்காமல் தினமும் இரு நூறு ரூபாய் கிடைத்தால் போதும் என்ற மன நிலை. அரசியல், கட்ட பஞ்சாயத்து அல்லது போராட்டத்தில் மூன்று மணி நேரத்தில் சம்பாத்தியம், அரசியல்வாதிகளைப் போல் கொள்ளையடித்து ஏமாற்றி பொய் சொல்லி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நண்பர் கீழ் கண்டவாறு கூறினார்:

நான் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பில்டிங் கட்டுதல் ரோடு மற்றும் பாலங்கள் கட்டுதல். கார்மெண்ட்ஸ் நிறுவனம் நடத்தினேன். அதில் பல ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்து வேலை வாங்கி உள்ளேன், வண்டி வாகனங்கள் இதையெல்லாம் வைத்து வேலை வாங்கி அதில் வேலை செய்த தமிழர்கள், இப்பொழுது வேலை செய்வது இல்லை, முழுவதும் வட நாட்டு மக்களுக்கு தான் வேலை தமிழர்கள் இப்பொழுது கிடைப்பது இல்லை அதனால் வெளிமாநிலத்தவர்கள் இங்கே உடல் உழைப்பு தந்து தனது பொருளாதாரத்தை வலிமைப்படுத்தி கொண்டிருக்கிறார்கள்... விரைவில் தமிழனும் பிச்சை எடுப்பான் அன்று புரியும்.

ஹார்டுவேர்ஸ், பெயின்டர்கள் கார்பெண்டர்,பெரிய ஆள் ஹெல்பர்கள் ,பிட்டர்கள், டெய்லர்கள் , மேஸ்திரிகள். முக்கிய தொழிலாக ஹோட்டல்கள், ஹோட்டல்களில் வேலை செய்பவர் , மாஸ்டர்களே இப்பொழுது வட நாட்டவர் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். எல்லா தரப்பட்ட உடல் உழைப்பு தரும் ஆட்கள். தாம்பரத்தில் முக்கிய ஹோட்டலில் தோசை மாஸ்டர் வட நாட்டவர் அவரிடம் பேசினோம் அவர் சொன்ன விவரங்களுக்கு தலை கிறுகிறுத்தது,

மாதம் மாதம் ரூபாய் 10,000. (பத்தாயிரம்) அனுப்புகிறேன் என்று அந்த வடமாநிலத்து தொழிலாளி சொன்னார் அப்படியா என்று கேட்டு விட்டு வந்து விட்டேன் . வந்த பின்தான் யோசித்தேன் இந்த ஒருவர் மாதம் ரூபாய் 10,000. அனுப்புகிறார் ,இப்படி 10.பேர் அனுப்பினால் ஒருலட்சம். நூறுபேர் அனுப்பினால் #ஒருகோடி ஆயிரம் பேர் அனுப்பினால் ரூபாய் பத்துகோடி; ஒரு லட்சம் பேர் அனுப்பினால் ரூபாய் ஆயிரம்கோடி.

மனம் அய்யய்யோ என்று அதிர்ச்சியடைந்தது: முதலில் இவரின் கூட்டம் தமிழகத்தில் எவ்வளவு இருக்கிறது என குத்து மதிப்பாய் கணக்கு எடுப்போம் என பலரிடம் கேட்டேன். தொழில் நகரங்களான பெரும் நகரங்களில் மாவட்ட அளவில் உதாரணத்திற்கு திருப்பூரில் மூனு லட்சம் பேரும் கோவையில்_ஏழுலட்சம் பேரும் சென்னையில்_ இருபது லட்சம் பேரும் இருப்பார்கள் என சொன்னார்கள் அப்போ சேலம் ஈரோடு போன்ற இன்ன பிற மாவடங்களில் எவ்வளவோ தெரியாது என்றார்கள் அதிர்ச்சியில் உறைந்துபோன நான் , சென்னை ,கோவை, திருப்பூர் மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்வோம் என முடிவெடுத்து , கணக்கு பார்த்தேன் மொத்தம் முப்பது லட்சம்பேர் ஒருவர் மாதம் மாதம் பத்தாயிரம் என்றால் 30லட்சம் பேர்க்கு கணக்கு

போட்டேன் #மூனாயிரம்கோடி எனக் காட்டி விட்டு கால்குலேட்டரே தன்னை காலாவதியாக்கிக் கொண்டது

மாதம் மாதம் 3,000 கோடி என்றால் வருடத்திற்கு 36,000 கோடி இது அனைத்தும் #தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருந்தால், அந்த சிறு பணம் புழக்கம் கொண்டு தமிழக மக்களையும் சிறு குறு பெரும் வியாபாரிகளை வளமாக வாழ வைக்க வேண்டிய இந்தப்பணம் #வடமாநிலங்களில் புளங்கிக் கொண்டிருக்கிறது .அங்கே இருக்கும் மக்களையும் சிறு குறு பெரும் வியாபாரிகளையும் வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

இது வெறும் தமிழகத்தின் மூனு மாவட்டக் கணக்கு ,மீதம் இருக்கும் 36 மாவட்டத்திலும். வடமாநில தொழிலாளிகளை குத்து மதிப்பாய் கணக்கெடுத்து கூட்டிப் பார்த்தால் தலை சுத்தி மயக்கம் வந்து மூர்ச்சையாகி இறந்தாலும் இறந்துவிடுவோம்.

இது வட மாநிலத் தொழிலாளர்கள் கணக்கு இன்னும் வடமாநில சுய தொழில் செய்யும் வியாபாரிகள், முதலாளிகள் போன்றோர்களை கணக்கெடுத்து அவர்கள் ஈட்டும் வருமானங்களை கூட்டிக் கழித்துப் பார்த்தால் அய்யய்யோ நினைத்து பார்க்க முடியவில்லை.

இன்னொரு பிரச்சினை பணப்புழக்கம் இல்லாமல் இருக்கும் காரணம் கைத்தொழில், எல்லாவகையான சிறு பொருட்கள் சீனாவிலிருந்து இறக்குமதி ஆகிறது . அதனால் லட்சக்கணக்கான பொருட்கள் அதாவது, உளி , சுத்தியல் ஆரம்பித்து மருத்துவர் போடும் ஊசி வரை. அப்போது ஏற்கெனவே இங்கு இருந்த இந்த தொழில் அது ஒரு தனி கதை.

சத்தமின்றி யுத்தமின்றி தமிழன் சாராயத்தாலும் உழைப்பில்லாமலும் இந்த மாபெரும் பொருளாதார போராட்டத்தில் தமிழன் அழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறான் என்பதை மட்டும் உணர முடிகிறது இதை தமிழன் எப்போது உணர்வது.?. மிகவும் கொடுமையானது ஆனால் நம்பி ஆகவேண்டிய உண்மை விவரம். பயிர் தொழில் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக வட நாட்டவர்கைகளில் சென்று கொண்டுள்ளது, களை எடுத்தல், அறப்பு அறுத்தல் , மருந்து அடித்தல் என வர ஆரம்பித்து விட்டார்கள் இனி என்னாகும் யோசியுங்கள்.

பட்டாலும் கெட்டாலும் வருந்தாத திருந்தாத தமிழன் இருக்கும்வரை தமிழனக்கு எதிரான இந்தப் பொருளாதாரப்போராட்டம் தொடர்ந்து நாம் பிச்சைக்காரர்கள் மாதிரி வாழ வேண்டும். இந்த பிச்சைக்கார நிலைமையில் அந்நிய சக்திகளின் தேசவிரோத நடவடிக்கைகளுக்கும் நம் தமிழர்கள் விலை போகிறார்கள்..

#தமிழா இதையெல்லாம் நீ உணர்ந்து விழிக்கும் போது உன் பொருளாதார வளம் வறண்டு இருக்கும் அல்லது மாண்டு இருக்கும்?

**வாழ்க தமிழ். தமிழ்நாடு. தமிழ் மக்கள்.**

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன்பெறுவீர்!**

**விளம்பரக் கட்டண விபரம்**

முழுப்பக்கம் : ரூ.2000/- அரைப்பக்கம் ரூ.1000/- கால்பக்கம் ரூ.500/-

இதழில் வெளிவருகின்ற கட்டுரைகள் விளம்பரங்கள் படைபாளிகளையே சார்ந்தது.

நேர்மைநெறி நிர்வாகமோ, ஆசிரியரோ பொறுப்பல்ல.

**நேர்மையில் பிடித்தது,**

## நேர்காணல்

காலை 11 மணிக்கு ஒரு பிரபலமான நிறுவனத்தில் நேர்காணலுக்கு அழைத்து இருந்தார்கள். நிறுவனத்தின் பாதுகாப்பு அதிகாரியிடம் விவரத்தை கூறிவிட்டு ஹாலில் அமர்ந்து நேர்காணல் அழைப்புக்கு காத்திருந்தேன். சற்று நேரத்தில் முருகவேல் என்று அழைப்பு வந்தது. உள்ளே சென்றவுடன் சில கேள்விகள் கேட்டு விட்டு உங்கள் பயோடேட்டாவில் வயது 40 என்று இருக்கே நிஜமா ?

ஆமாம் சார் உண்மை தான்.

அப்படியா ..? எங்கள் நிறுவனத்தில் இளைஞர்களை தான் வேலைக்கு எடுக்கின்றோம். உங்கள் வயது 40 என்று சொல்கிறிர். கொஞ்சம் யோசனை செய்ய வேண்டி இருக்கும் முருகவேல் என்றார்கள்.

பரவாயில்லை சார் நான் வேலை செய்ய தயாராக இருக்கிறேன் என்று கூறினேன். மேலும் இதற்கு முன் வேலை செய்த நிறுவனம் நஷ்டத்தில் இயங்கியதால் திடீர் என்று மூடிவிட்டார்கள். அதனால் வேறு வேலை தேடும் சூழ்நிலை உருவாகிவிட்டது சார்.. அந்த அதிகாரி சற்று யோசிப்பது போல் பாவனை செய்து விட்டு . முருகவேல் உங்கள் பயோடேட்டாவை கொடுத்து விட்டு செல்லுங்கள் தேவைப்படும்போது அழைக்கின்றோம் என்றார்.

மிக்க நன்றி சார் என்று கூறி விட்டு வெளியே வந்தேன். இங்கும் வேலை இல்லை. மனம் கனத்தது கூடவே தலையும் வலித்தது. பெரும்பாலான இடங்களில் வயதை காரணம் காட்டி தவிர்த்து விடுகிறார்கள்.

இறைவா என்ன சோதனை. அனைத்தும் நல்லபடியாக தான் போய்க்கொண்டு இருந்தது முன்பு வேலை செய்த நிறுவனம் மூடும் வரை.. அந்த வேலையை நம்பி வாங்கிய கடன்கள் கழுத்தை நெறிக்க தொடங்கியது.. ஒரே மகனின் படிப்பு செலவு , வீட்டுக்கு தேவையான செலவு மேலும்.. மேலும்.. ஐயனே ஈசனே எப்படி சமாளிக்க போகிறேன். தலை மேலும் வலித்தது. பேருந்துக்கு வைத்து இருக்கும் காசில் காபி சாப்பிட்டு நடந்து வீட்டுக்கு செல்லலாம் என்று முடிவு செய்து காபி சாப்பிட்டு நடக்க துவங்கினேன். வாங்கிய வண்டியும் ஒரமாக இருக்கிறது.

ஆழ்ந்த சிந்தனையில் நடந்து செல்லும்போது ரோட்டின் ஓரத்தில் ஒரு தோல் பை அனாதையாக கிடந்தது. சின்னதாக ஒரு சபலம் எடுத்து திறந்து பார்த்தேன் . குப்பென்று வியர்த்து கொட்டியது. பையில் கட்டு கட்டாக 2000 ரூபாய் நோட்டுகள்.. கை கால்கள் உதறல் எடுத்தது. இருப்பினும் எடுத்து வைத்து கொண்டேன். மனம் பலவிதமாக என்னுள் பேசியது. ஒரு பக்கம் எச்சரிக்கை செய்தது. அருகில் உள்ள காவல் நிலையத்தில் ஒப்படைத்து விடலாம் என்ற எண்ணம் தோன்றியது. ஆனாலும் கட்ட வேண்டிய கடன்களும் , குடும்ப செலவுகளும் கண் முன்னே நின்று பயமுறுத்தியது. வீடு வந்து சேரும் வரை மனச்சத்தங்கள் ஏராளம் , உடல் முழுவதும் வியர்வை ஊற்றியது. வீட்டில் உள்ள அலமாரியில் பணத்தை பத்திரமாக வைத்தேன். வெளியே சென்று திரும்பிய மனைவி என்னங்க ஒரு நடுக்கமா இருக்கறிங்க என கேட்டாள்.

வள்ளி அந்த கதவை சாத்திட்டு உள்ளே வா என்றேன். நடந்த விவரங்களை சொல்லி . யாராவது கேட்பார்கள் என்று திரும்பி, திரும்பி பார்த்தேன் யாரும் வரவில்லை , எனப் பொய் கூறினேன். பணத்தை எண்ணி பார்த்தேன் மொத்தமாக 12 லட்சம். வள்ளி சில மாதங்கள் வேலை கிடைக்கும் வரை நமக்கு கவலை இல்லை.நம் செலவுக்கு இது போதும் என்றேன். மனைவி அமைதியாக இருந்தாள். ஏதாவது பேசு என்றேன். இந்த பணம் நமக்கு வேண்டாங்க என்றாள் மனைவி. வள்ளி என்ன பேசுற நீ இறைவனா பார்த்து தான் நமக்கு துன்பங்கள் தீர வழி காட்டி இருக்காரு.. உங்க அல்ப புத்திக்கு இறைவன் மேல் பழிபோடாதீங்க என்றாள்.

வள்ளி எனக்கு இன்னும் வேலை கிடைக்கல கட்ட வேண்டிய கடன்களும் செலவுகளும் கழுத்தை நெரிக்க ஆரம்பித்துவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த பணம் நமக்கு எவ்வளவு உதவியாக இருக்குமே நினைத்து பார் வள்ளி. இன்னொருவர் பணத்தில் வாழ்வது தப்புங்க. அதுக்கு பதிலா இருவருமே கஷ்டப்பட்டு சம்பாதிக்கலாம் என்றாள் மனைவி.

அப்போ வீட்டு செலவுக்கு என்னதான் நான் செய்வேன் என்று கோபமாய் குரலை உயர்த்த.. இறைவன் சோதிபாருங்க ஆன கைவிடமாட்டார். என்று கூறி டக்கென்று கழுத்திலிருந்த தாலியை கழற்றி இதை விற்று விடுங்கள் எனக்கு மஞ்சள் கயிறு போதும் என்றாள். வள்ளி என அதிர்ந்து விட்டேன்.

அடுத்தவங்க பணத்துல வயிற்றை நிரப்பிக் கொள்வதைவிட இது எவ்வளவோ மேலுங்க. இந்த பணம் யாருக்கு சொந்தமோ அவர்களிடம் கொடுத்து விட்டு தான் நீங்கள் வீட்டில் நுழைய வேண்டும் என்று ஓடி கதவை சாத்திக்கொண்டு அழ ஆரம்பித்தாள். மனைவியின் தாலி கையில் கனத்தது. பணப்பையில் ஆராய்ந்து பார்த்தேன் முகவரி இருந்தது. அந்த பங்களாவுக்கு நான் நுழைந்த போது கோயிலில் நுழைந்த உணர்வு. ல்லிய ஓசையில் சிவனைப் பற்றி பாடல்கள்.

அழைப்பு மணியை அடித்தேன். நெற்றி நிறைய விபூதியுடன் ஒரு பெரியவர் வந்து பார்த்தார். நடந்த விவரங்களை அவரிடம் கூறி பணப்பையை கொடுத்தேன். மகிழ்ந்த அவர் உள்ளே அழைத்து சென்று குளிர்பானம் கொடுத்து உபசரித்தார். தம்பி நிறுவனத்தில் இருந்து காரில் வரும் போது பணப்பை தவறி விழுந்தது விட்டது. திரும்பி தேடி செல்லும் போது கிடைக்கவில்லை. உங்களை போல் நல்லவர்களும் இருக்கிறார்கள் . அதான் தவறவிட்ட பணம் திரும்ப வந்து விட்டது என்றபடி என்னை பற்றிய விவரங்களை கேட்டார். என்னுடைய சூழ்நிலை பற்றிய விவரங்களை கூறினேன். அப்படியே யோசித்து தம்பி கொஞ்சம் இருங்கள். இதே ஒரு போன் செய்து விட்டு வருகிறேன் என்று உள்ளே சென்றார்.

திரும்பி வந்தவர் தம்பி என்னோட நிறுவனத்தில் வேலை செய்ய உங்களுக்கு விருப்பமா? அடுத்த வாரம் எங்கள் மேலாளர் ஓய்வு பெறுகிறார். அவரோட இடத்தில் யாரை நியமிப்பது என நினைத்து கொண்டு இருந்தேன். நீங்கள் ஏன் அந்த வேலையில் சேரக்கூடாது? நீங்கள் நாளைக்கு சேர்ந்து நிறுவனத்தில் டிரைனிங் எடுங்கள். வேலைக்கான உத்தரவு கடிதம் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடும்.

வேறு யாராவது உங்களுடைய சூழ்நிலையில் இருந்து இருந்தால் இந்த 12 லட்சம் பணம் திரும்ப வந்து இருக்காது. இந்த வேலை உங்கள் நேர்மைக்கும் ஒழுக்கத்திற்கும். நான் கொடுக்கும் பரிசு என்றார்

. நமச்சிவாயா !!! என் கண்ணில் கண்ணீர். கண்ணீரில் ஆயிரம் நன்றிகள் என் மனைவி வள்ளிக்கு... அந்த வீட்டின் ஒலிநாடாவில் குரு உபதேசம் மெல்லியதாக கேட்டது. "மூவுலகையும் ஆளும் சிவபெருமான் சோதிப்பான் ஆனால் நம்பியோரை கைவிட மாட்டார்." என்று கேட்டது.

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போய்ப் பெறுவ தெவன். (குறள்)**

**நமசிவாயம் போற்றி. அறநெறியில் இல்வாழ்க்கை அமைத்துக் கொண்டவர்கள் பெற்றிடும் பயனை, வேறு நெறியில் சென்று பெற்றிட முடியுமோ ???**

**உலகுக்கே படியளக்கும் ஈசன் உமக்கு படியளக்க மாட்டாரா???**

## ர஁பேல் விமான ஊழல்! புதைக்கப்பட்ட உண்மைகள் பூகம்பமாகிறது!

உண்மைகளை நீண்ட காலம் உறங்க வைக்க முடியாது! அதிகார பலத்தால் பொய்களை நிலைத்திருக்கச் செய்யவும் முடியாது என்பது மீண்டும் ரபேல் விமான ஊழல்கள் பிரான்சில் தோண்டி எடுக்கபடுவதில் இருந்து உணரமுடிகிறது. ஜீலை 2 ல் பிரான்ஸ் அரசு ஒரு நீதி விசாரணையை தொடங்கியுள்ளது. இந்த ஊழல் மோடி அரசின் முகத் திரையை கிழிக்கும். சர்சைக்குள்ளான 5,85,000 கோடி ரூபாய் ர஁பேல் விமான ஒப்பந்தத்தில் முறைகேடுகள் நடந்துள்ளன, ஊழல், அதிகார துஷ்பிரயோகம், பணப் பரிவர்த்தனை, சாதகமாக நடந்து கொள்ளுதல் போன்ற குற்றங்கள் நடந்தேறியுள்ளன என்பதற்கு முகாந்திரம் இருப்பதால் பி என் எப் (PNF) என்றழைக்கப்படும் பிரெஞ்சு அரசு வழக்காடு துறையின் கோரிக்கையை ஏற்று -இந்த விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது, பிரான்ஸ் அரசு!

மீடியா பார்ட் (**Mediapart**) என்ற பிரெஞ்சு ஆன்லைன் பத்திரிக்கையில் வந்த (ஏப்ரல் 2021) மிகத்துல்லியமான குற்றசாட்டுகள்,சான்றுகள், ஆய்வுகளின் அடிப்படையில் இவ்விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இந்த புகார்கள் அரசு வழக்காடுதுறைக்கு வந்தபோது விசாரணைக்கு மறுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது மேலும் பல புலனாய்வு தகவல்களும் சான்றுகளும் மீடியாபார்ட் பத்திரிக்கையில் வந்ததை அடுத்து , மீண்டும் ஊழலுக்கெதிரான தொண்டு நிறுவனம் -ஷெர்பா-அளித்த புகாரை புதிதாக பதவியேற்றுள்ள வழக்காடுதுறை தலைவர் ழான் பிரான்காய் பானட் ஏற்று, நீதி விசாரணை துவக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணை விரைவில் உண்மையை வெளிக்கொண்டுவரும், பல விஷயங்கள் தெளிவாகும் என்று ஷெர்பாவின் வழக்கறிஞர் கூறுகிறார்.

**நண்பேண்டா……**

காங்கிரஸ் ஆட்சியில் இந்திய அரசுக்கும் பிரெஞ்சு தசால்ட் நிறுவனத்திற்கும் பல வருடங்களாக 126 ர஁பேல் விமானங்கள் வாங்குவது- 18 விமானங்களை வாங்குவது மீதமுள்ள 108 விமானங்களை தொழில்நுட்ப பகிர்வு நடவடிக்கை மூலம் இந்தியாவிலேயே - இந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல்ஸ் லிமிட்டெட்( HAL ) என்ற புகழ்பெற்ற பொதுத்துறை நிறுவனத்தில் உற்பத்தி செய்வது என்று பேச்சுவார்த்தை நடந்துமுடிந்த நிலையில், திடீரென்று 36 விமானங்களை மட்டும் நம்பமுடியாத அதிக விலை கொடுத்து இந்தியா வாங்க முடிவெடுத்துள்ளதாக 2015 ஏப்ரல் மோடி பாரீஸில் அறிவித்தார்.

- **இதன்மூலம் பொதுத்துறை நிறுவனங்களுக்கு விழுந்தது மரண அடி..!**
- **மேக் இன் இந்தியா என்ற மோடியின் கோஷமும் கோவிந்தா ஆனது.**
- **மக்களின் வரிப்பணமோ சூறையாடப்பட்டது (5.2 பில்லியனிலிருந்து 8.2 பில்லியனாக)**
- **தற்சார்பு நிலை தகர்க்கப்பட்டது; தளவாடங்கள் வாங்கும் சட்டவிதிகள் மீறப்பட்டன!**
- **நேர்மைக்கும் வெளிப்படைத்தன்மைக்கும் சாவுமணி அடிக்கப்பட்டது.**

மறைந்துபோன மனோகர் பரீக்கர் என்ற அன்றைய ராணுவ அமைச்சருக்கும் தெரியாமல் இந்த ஒப்பந்தம் “திடுமென்று” அறிவிக்கப்பட்டது மோடியால்! தசால்ட் நிறுவனத்திற்கும் HAL நிறுவனத்திற்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை 94% முடிந்த

நேரத்தில் தசால்ட் நிறுவனம் அனில் அம்பானி நிறுவனத்துடன் கூட்டுத்தாயாரிப்பில் ஈடுபடவும்,விரிவாக்கம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றுக்கும் ஒப்பந்தம் போடுகிறது என்றால் அதன் பொருள் என்ன? இந்த கேள்விக்கு முன்னாள் **பிரான்ஸ் நாட்டு அதிபர் ஹோலன்டேவின்** பதில்: "எங்களுக்கு ரஃபேல் விமானங்கள் விற்க வேண்டுமென்றால் , இந்திய அரசு சொல்வதை கேட்பதை தவிர்த்து வேறு வழி இல்லை.." என்பதுதான்.

**இராணுவ ரகசியத்தை விட அம்பானியின் நட்பே பெரிது!**

ராணுவ மந்திரி மனோகர் பரிக்கருக்கு தெரியாத விஷயம், அன்றைய வெளியுறவு செயலர் ஜெய்சங்கருக்கு தெரியாத ரகசியம் அனில் அம்பானிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே -2012 ஒப்பந்தம் முறியப் போகிறது என்ற விஷயம்- தெரிகிறது! அதற்காகவே அவர் முன்னதாக பிரான்ஸ் நாடு செல்கிறார் மார்ச்26,2015ல் தசால்ட் நிறுவனத்துடன் - வெறுங்கையை வைத்துக்கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகிறார்

இரண்டு வாரங்கள் கழித்து அதாவது, ஏப்ரல் 10, 2015ல் மோடி பாரீசில் அறிவிக்கிறார். 2012 ல் போடப்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்படுகிறது! புதிதாக இரண்டு நாட்டு அரசுகளுக்கு இடையே 36 விமானங்கள் வாங்க ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.ஏற்கனவே ஒத்துக்கொண்ட விலையை விட மூன்று மடங்கு அதிகம் கொடுத்து வாங்க இந்தியா முழுமனதுடன் (மகிழ்ச்சியுடன்?) ஒத்துக்கொண்டதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

**அம்பானிக்காக மோடி தந்த நிர்பந்தம்**

இந்த மாற்றத்திற்கு காரணம் மோடியின் மிரட்டலும் அழுத்தமுமே காரணம் என்று மீடியாபார்ட் சான்றுகளுடன் முறையிடுகிறது. அந்த ஆன்லைன் இதழ் மேலும்கூறுகிறது:" நாங்கள் பார்த்த அந்த ஒப்பந்தம்(தசால்ட்-அனில் அம்பானி ஒப்பந்தம்) ஒரு விஷயத்தை தெளிவாக கூறுகிறது, அம்பானி பெரிய தொழில்நுட்பத்தையோ, பணத்தையோ முதலீடாக கொண்டிருக்கவில்லை. அவர் கொண்டுவந்ததெல்லாம் இந்திய அரசிடம் நெருங்கி காரியம் சாதிக்கக்கூடிய அதன் செல்வாக்கு மட்டுந்தான். மார்ச் 26ல் இவ்விரு கம்பெனிகளும் இவ்வாறு ஒப்பந்தம் போடுகிறார்கள் என்றால் இவர்களுக்கு 2012 ஒப்பந்தம் முறிக்கப்பட போகிற விஷயம் எப்படி முன்கூட்டியே தெரிந்தது என்பதுதான்.

ஏனெனில், 126 விமானங்களுக்காக ஹால் (HAL ) நிறுவனத்திடம் பேசிக் கொண்டிருக்கும் போதே ஏற்பட்ட இந்த ஒப்பந்தம் HAL பற்றியோ அதன் பங்கு பற்றியோ குறிப்பிடாமல் புறக்கணித்தது ஏன் என்பது சந்தேகத்தை கிளப்பவில்லையா? அதனடிப்படையில் மேலும் பல முக்கியமான ஆவணங்களை மீடியாபார்ட் ஆராய்ந்த பொழுது, அவர்களுக்கு தெளிவாக ஒரு விஷயம் புரிந்தது என்றும் அது தசால்ட் ரிலையன்ஸ், அம்பானியுடன் ஒப்பந்தம் போட ஒரே காரணம் அவர் பிரதமருக்கு மிகவும் வேண்டிய நெருக்கமான நபர், அவரை வைத்து காரியங்களை சாதிக்கலாம் என்ற எண்ணம்தான்.

இதற்காக, டி ஆர் ஏ எல் DRAL Dassault Reliance Aerospace Limited என்ற கூட்டு தாபனத்தை மார்ச் ஒப்பந்தம்மூலமாக நாக்பூரில் நிறுவினர். அந்த நேரத்தில் நாக்பூரில் அனில் அம்பானிக்கோ ஒரு சென்ட் இடம் கூடக் கிடையாது. அனிலுடன் தசால்ட் செய்து கொண்ட ஒப்பந்தம் அனிலுக்கு பலவழிகளில் உதவியது,குறிப்பாக நாக்பூரில் நிலம் வாங்கக்கூட தசால்ட் பணம்தான் உதவியது மட்டுமன்றி, அவருக்கு பெருமளவு கடனும் கொடுத்தது என்கிறது மீடியாபார்ட்.

**முதல் இல்லாமல் துவங்கப்பட்ட மோசடி..!**

பங்குதாரர்கள் சமமாக முதல் போட்டு தொழில் துவங்குவது தான் உலக நியதி . ஆனால் மொத்த முதலீட்டுத்தொகையான 169 மில்லியன் யூரோவில் 159 மில்லியன்களை தசால்ட் நிறுவனமே தன்கையில் இருந்து வழங்கியுள்ளது. 94% முதலை தானே போட்டு ஒன்றுக்கும் உதவாத அனில்அம்பானியுடன் கூட்டுசேர்ந்து தொழில் தொடங்க தசால்ட் ஏன் முற்பட்டது? ரிலையன்ஸ் அம்பானியை பங்குதார்ராக தேர்ந்தெடுத்ததில் இந்திய அரசின் பங்குதான் அதிகமுள்ளது, எங்களுக்கு வேறு வழி ஏதுமில்லை என்ற பிரான்ஸ் முன்னாள் அதிபர் ஹோலேன்டேயின் கூற்றுக்குப்பிறகு மீடியபார்ட் நிருபர் வெளிக்கொணர்ந்த இந்த தகவல்கள் மீண்டும் பிரச்சினையை அலச வைக்கின்றது.

2015 ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்ட 36 விமானங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தம் ஒருவழியாக செப்டம்பர் 2016ல் இந்தியா மற்றும் பிரான்ஸ் நாடுகள் இடையே கையெழுத்தாகிற்று. அதற்கு இரண்டு மாதங்கள் கழித்து தசால்ட் ஏவியேஷன் நிறுவனமும் ,அனில் அம்பானி ரிலையன்ஸ் நிறுவனமும் பங்குதாரர் ஒப்பந்தத்தை போட்டனர். இதுவே இவர்கள் எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்று வகைப்படுத்தும் உடன்பாடாகும்.

சுருங்கக்கூறின் அனில் அம்பானி தன் அரசியல் செல்வாக்கினால் இந்திய அரசை தசால்ட் நிறுவனத்திற்கு சாதகமாக நடக்க வளைக்கவேண்டும். இந்த வெட்கக்கேடான செயலின் மூலகர்த்தாவான மோடி இதற்காக சட்டங்களையும், விதிகளையும், மரபுகள் மற்றும் மாண்புகளையும் மீறி தான்தோன்றிதனமாக நடந்துள்ளார். இதை கண்டித்து முதலில் **ராகுல் காந்தி** நாடாளுமன்றத்தில் குரலெழுப்பினார். அவரை வசைபாடி ஏளனம் செய்தனர் ஆளுங்கட்சியினரும் அவரது அடிவருடிகளும்.

தொடர்ந்து இந்த பிரச்சினையை முறைகேட்டை எதிர்த்து பா ஜ க வை சேர்ந்த முன்னாள் அமைச்சரும் பிரபல பத்திரிக்கையாளருமான **அருண் ஷோரி**, பிரபல பொதுநல வழக்குரைஞர் **பிரசாந்த் பூஷன்** மற்றும் முன்னாள் நிதி அமைச்சரும் பா ஜ க தலைவர்களில் ஒருவருமான **யஷ்வந்த் சின்கா** ஆகிய மூவரும் இணைந்து குரலெழுப்பினர், உச்ச நீதி மன்றத்தில் பொதுநல வழக்கை தொடுத்தனர். முதலில் ராகுல் காந்தியும் பின்னர் அருண் ஷோரி, யஷவந்த் சின்கா போன்றோரும் மற்றும் எண்ணற்ற ஆர்வலர்களும் முன்னாள் அதிகாரிகளும், நல்லெண்ணம் கொண்டோரும் எழுப்பிய கேள்விகள் இவைதான்.

**பாஜக அரசால் பதில் தர முடியாத கேள்விகள்**

- எதற்காக ஒத்துக்கொண்ட விலையை விட மூன்றுமடங்கு அதிக விலை கொடுக்க வேண்டும்?
- பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் திட்டம் (2012) ஏன் மீறப்பட்டது?
- ப்செட் OFFSET AGREEMENT ஒப்பந்தத்தில் இந்திய அரசிற்கு உரிய கண்காணிக்கும் பங்கை மறுதலித்து திறமையற்ற, அனுபவமற்ற இந்திய பங்குதார்ரை ஏன் அனுமதித்தீர்கள்?
- பொதுத்துறை நிறுவனமான H A L நிறுவனத்தை- எழுபது ஆண்டு வரலாறும், இந்திய பாதுகாப்பு துறையில் பெருத்த அனுபவமிக்க, மிக் மற்றும் சுக்காய் ரக விமானங்கள் தயாரிக்கும் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் நிறுவனத்தை புறக்கணித்தது ஏன்?
- இன்டர் கவர்மென்ட்டல் அக்ரிமன்ட் IGA என்று சொல்லக்கூடிய ஒப்பந்தப்படி ஏன் சாவரீன் கேரன்டீ பெறப்படவில்லை?

- சட்டத்துறை அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் எழப்பிய சந்தேகங்களும் ஆட்சேபனைகளும் ஏன் பதிலளிக்கப்படாமல் அமுக்கப்பட்டன?
- நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமல்,நாட்டு நலன்களை முன்னெடுத்து செல்லாமல் எந்த உத்தரவாதமும் இன்றி தசால்ட் நிறுவனத்திற்கு பல்லாயிரம் கோடி பணம் முன்பணமாக ஏன் கொடுக்கப் பட்டது?

அனில் அம்பானிக்கு கொடுத்து உதவுதற்கா இந்த நாடகமெல்லாம்? இன்று வெளியாகும் ஆவணங்கள் இந்த கள்ள உறவை (Nexus) வெளிச்சம் போட்டு காட்டவில்லையா?

**அதிகாரபலத்தால் மறைக்கப்பட்ட நீதி!**

அன்று உச்ச நீதிமன்றத்தில் இம்முறைகேட்டை தீர விசாரணைக்கு உட்படுத்தக்கோரிய மனுவை தீர விசாரிக்காமல், தவறான தீர்ப்பை வழங்கி மோடி அரசை இக்கட்டிலிருந்து காப்பாற்றியது உச்ச நீதிமன்றம்.இந்திய கணக்கு மற்றும் தணிக்கை தீர்ப்பாயமும் தன்பங்கிற்கு, உண்மை விவரங்களை மூடிமறைத்து நாடாளுமன்றத்தையே ஏமாற்றியது நம்மால் மறக்க இயலுமா? தவறான தகவல்களை கோர்ட்டில் சமர்ப்பித்து நீதிமன்றத்தை ஏன் நீதியையும் கூட திசை திருப்பும் முயற்சிக்கு தலைமை நீதியரசர் துணை போனதும் நாம் மறக்கவில்லை. அதற்காகத் தான் அவருக்கு ராஜ்ய சபா உறுப்பினராகும் வெகுமதி கிடைத்தது என்ற விமர்சனங்கள் வைக்கப்பட்டது உண்மைதானே.

பல்வேறு வழிகளில் உண்மை வெளிவராமல் பாதுகாக்க மோடிஅரசு முயன்று அதில் பெருமளவு வெற்றியும் பெற்ற நிலையில் - பாறையை பிளந்து வரும் செடி போல - உண்மைகளை வெளிக் கொணரும் முயற்சிகள் பிரான்சில் நடப்பது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உண்மை நீண்டநாள் உறங்காது என்பதற்கு இந்த நீதி விசாரணை தொடக்கமாக அமையும் என்பதில் ஐயமில்லை.இங்கும் ஒரு பொது விசாரணை , நியாயமான விசாரணை தேவை என்ற கோரிக்கைக்கு இது மேலும் வலு சேர்க்கிறது

**-ச. அருணாசலம்**

நன்றி அறம் ,July 6, 2021

---

## <u>தடுப்பசி; சர்வதேச நிறுவனங்களின் சந்தைக்காடாகும் இந்தியா!</u>

எங்கெங்கும் தடுப்பூசி பற்றாகுறை! பெருந்தொற்று காலத்திலும் தனியார் நிறுவனங்கள் வளம் பெற வேண்டும் என்ற ஒற்றைக் கொள்கை கொண்ட ஒன்றிய அரசு! சீரம், பாரத் பயோடெக் ஆகிய இரு தனியார் நிறுவனங்களைக் கொண்டு தடுப்பூசி தேவைகளை சமாளிக்க முடியவில்லை. அதே சமயம் பொதுத் துறை நிறுவனங்கள் தடுப்பூசிகளை தயாரிக்க அனுமதி மறுப்பு! அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் நிறுவன தடுப்பூசிகளுக்கு தாரள அனுமதி..! இந்திய தடுப்பூசி சந்தையில் என்ன நடக்கிறது..?

கொரானா தடுப்பை கையாளும் விதத்தில் குளறுபடிகளின் உச்சத்தை தொட்டுவிட்டது இந்திய அரசு! தடுப்பூசி நிர்வாகத்திலோ ஏகத்துக்கும் தள்ளாடுகிறது! தடுப்பூசி ஒன்றே தீர்வு என்று சொல்லி மக்களை உசுப்பேற்றிவிட்டார்கள். தடுப்பூசி போடாவிட்டால் வேலைக்கு வராதே போன்ற நிர்பந்தங்கள் வேறு! சரி எதுக்குடா சாமி

வம்பு போட்டுவிடுவோமே..என்று மருத்துவமனை போனால் பற்றாகுறை ''இன்று போய் நாளை வா'' என்கிறார்கள்!

ஒவ்வொரு நாளும் கிலோமீட்டர் கணக்கில் தடுப்பூசி செலுத்திக் கொள்ள மக்கள் அரசு மருத்துவமனைகளின் முன்பு காத்துக் கிடக்கிறார்கள்! பல மணிநேர காத்திருப்புக்கு பிறகு ஸ்டாக் தீர்ந்துவிட்டது என்ற அறிவிப்பால் மக்கள் ஏமாந்து, கோபப்பட்டு பல இடங்களில் போராட்டங்கள் கூட நடந்துள்ளன. மிகக் குறைந்த பயன்பாடே உள்ள தனியார் மருத்துவமனைகளுக்கு அதிக தடுப்பூசிகளை அள்ளிக் கொடுக்கும் மத்திய அரசு, மாநில அரசுகளுக்கோ கொஞ்சமாக கிள்ளிக் கொடுத்து சமாளித்து வருகிறது. ''தமிழகத்தில் இது வரை பயன்படுத்தப்பட்ட ஒரு கோடியே 43 லட்சம் தடுப்பூசியில் தனியார் மருத்துவமனைகளில் வெறும் ஆறரை லட்சம் தடுப்பூசிகளையே கையாண்டுள்ளனர். ஆக, தனியார் மருத்துவமனைகளின் பயன்பாடு வெறும் 4.5 சதவீதமாக இருக்கும் போது, தனியாருக்கு ஏன் 25% சதவிகித தடுப்பூசிகளை கூடுதலாக கொடுக்க வேண்டும்!

''அரசு மருத்துவனைகள் ஒரு நாளுக்கான தடுப்பூசிகளை மட்டுமே கைவசம் வைத்துக் கொண்டு திணறும் போது, தனியார் மருத்துவமனைகளோ ஒரு மாதத்திற்கான தடுப்பூசிகளை வைத்துள்ளன.''என ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளதை பார்க்கும் போது அரசு மருத்துவமனை வருகின்றவர்களை வலிந்து தனியார் மருத்துவமனைகளுக்கு தள்ளும் சூழ்ச்சியை மத்திய அரசு செய்கிறதோ என நமக்கு சந்தேகம் வருகின்றது!

எனவே, தான் மாநிலங்களுக்கான தடுப்பூசி ஒதுக்கீட்டை மக்கள் தொகை அடிப்படையில் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும்,அரசு மருத்துவமனைகளுக்கு தடுப்பூசி ஒதுக்கீடு 75 சதவீதமாக இருப்பதை 95 சதவீதமாகவும், தனியார் மருத்துவமனைகளுக்கான தடுப்பூசி ஒதுக்கீடு 25 சதவீதம் என்பதை, 5 சதவீதமாகவும் மாற்றி அமைப்பது சரியாக இருக்கும். ஏனென்றால், தனியார் நிறுவன நலன்களை காப்பாற்றுவதே தலையாய கடமையாகக் கொண்டுள்ளது மத்திய அரசு! தனியார்கள் மட்டுமே தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதிலும் பிடிவாதம் காட்டி வருகிறது! சுமார் 800 கோடிகளுக்கும் அதிகமாக செலவு செய்து சகல வசதிகளுடன் தயாராக இருக்கும் செங்கல்பட்டு தடுப்பூசி வளாகத்தில் தமிழக அரசு உற்பத்தியை தொடங்க விருப்பம் தெரிவித்தது. ஒரு வாரத்தில் பதில் சொல்வதாக சொன்ன மத்திய அரசு., ஒன்றரை மாதங்களாகியும் பதில் சொல்லாமல் இழுத்தடிக்கிறது. இது மட்டுமின்றி இதே போல குன்னூர், கிண்டி உள்ளிட்ட இந்தியாவின் ஏழு இடங்களில் உள்ள பொதுத் துறை நிறுவனங்களின் கைகளையும் மத்திய அரசு கட்டிப் போட்டுள்ளது. இதனால் போதுமான அளவு தடுப்பூசிகள் போடமுடியாத நெருக்கடிகளை மாநில அரசுகள் சந்திக்கின்றன!

தடுப்பூசி போட ஆரம்பித்து 163 நாட்களைக் கடந்துள்ள நிலையில் இது வரை இந்தியாவில் முதல் கட்ட தடுப்பூசிகளை எடுத்துக் கொண்டவர்கள் எண்ணிக்கை 27 கோடியே 27 லட்சமாகும்! இதில் இரண்டாம் கட்ட தடுப்பூசியை எடுத்துக் கொள்ள முடிந்தவர்களின் எண்ணிக்கை வெறும் 5 கோடியே 84 லட்சமாகும். ஆக மொத்தமாக பார்க்கும் போது, முழுமையான தடுப்பூசி கடமையை செய்யமுடிந்தவர்கள் ஆறு கோடிக்கும் குறைவாகவே உள்ளனர்! கிட்டதட்ட அரை ஆண்டை கடந்த நிலையில் ஒரு மாபெரும் மக்கள் தொகை கொண்ட நாட்டில் இவ்வளவு தான் முடிந்துள்ளது என்றால், இவர்களின் நிர்வாக லட்சணத்தில் அனைத்து மக்களுக்குமான இலக்கை அடைய பற்பல ஆண்டுகள் தேவைப்படும் என்பதே நிதர்சனமாகும்! இந்த யதார்த்தம் தெரியவந்த போதும்

பொதுத் துறை நிறுவனங்களின் கட்டப்பட்ட கைகளை விடுவிக்கமாட்டேன் என்பது தான் மத்திய அரசின் நிலைபாடாக உள்ளது.

ஆனால், இப்படியே போனால், தடுப்பூசியின் ஆற்றல் எட்டுமாதத்திற்குள் முடிந்த நிலையில், அடுத்தகட்ட தடுப்பூசிக்காக மக்கள் வரிசை கட்ட நேரிடும்! ஆக, தடுப்பூசிகளை வாங்கும் செலவுகள், அதற்கான வணிகம், அதை செலுத்துவதற்கான மாபெரும் மனித உழைப்பு என்பதாகவே நாட்கள் நகருமா தெரியவில்லை..இதற்கிடையில் இன்று அமெரிக்காவின் மாடர்னா தடுப்பூசியை இந்தியாவில் பயன்பாட்டுக்கு கொண்டு வர சிப்லா நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது! அமெரிக்காவின் பைசரும் பயன்பாட்டு வரலாம் என சொல்லப்படுகிறது. இதை ஏன் மத்திய அரசோ, மாநில அரசோ நேரடியாக அந்த நிறுவனத்திடமிருந்து வாங்க கூடாது? எதற்கு ஒரு தனியார் இடைத் தரகரை அனுமதிக்கிறார்கள் எனத் தெரியவில்லை. சென்ற மாதம் தமிழ்நாடு அரசே நேரடியாக கொள்முதல் செய்வதாக அறிவித்து பின் அமைதியானது நினைவுக்கு வருகிறது. ஏற்கனவே ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுபூசியை இங்கே பயன்பாட்டுக்கு கொண்டு வந்துவிட்டார்கள்! ரஷ்யாவில் இந்த ,ஸ்புட்னிக் தடுப்பூசியால் ஆண்மை குறைவு ஏற்படுகிறது என கடும் விமர்சனத்திற்கு உள்ளானது!

பிரிட்டனின் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவன தடுப்பூசியும் பயன்பாட்டுக்கு வர இன்று பேச்சுவார்த்தை நடந்துள்ளது. இதுவும் நடைமுறைக்கு வந்தால் பல்வேறு அணுகுமுறைகள் கொண்டு உருவாக்கப்பட்ட பலதரப்பட்ட தடுப்பூசிகள் புழக்கத்தில் உள்ள ஒரே நாடாக இந்தியா தான் இருக்கும் என தோன்றுகிறது! இப்படி வெளிநாட்டுக் கார்ப்பரேட் நிறுவனங்கள் கேட்டவுடனே இந்திய சந்தையை திறந்துவிட தயாராக இருக்கும் மத்திய அரசு தமிழக அரசு கேட்டும் செங்கல்பட்டு தடுப்பூசி மையத்தை செயல்படுத்த ஏன் அனுமதி மறுக்க வேண்டும்?

சர்வதேச கார்ப்பரேட் நிறுவனங்களின் சந்தைக்கான வேட்டைக்காடாக இந்தியாவை அடமானம் வைக்கிறது மத்திய அரசு! ஆக, பெருந்தொற்று காலத்தை பெரும் கொள்ளையர்களுக்கான வாய்ப்பாக்குவது தான் ஒரு மக்கள் நல அரசு செய்யும் காரியமா..? நம்முடைய ஆற்றல், நம்முடை அறிவு, நம்முடைய உழைப்பு எல்லாவற்றையும் முடக்கி வைத்து, நம்முடைய உடலையும், உயிரையும் தனியார் நிறுவனங்களுக்கும், அந்நிய நிறுவனங்களுக்கும் விலை பேசி ஆதாயம் அடைவதற்கு தான் நாம் இவர்களை ஓட்டுப்போட்டு தேர்ந்து எடுத்தோமா..?

நம்மை அடிமைப்படுத்தி தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, லஞ்ச ஆதாயம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நமது அரசு இயங்குகிறது என்பது பட்டவர்த்தனமாக தெரிகிறது!

***சாவித்திரி கண்ணன்*** **June 29, 2021**

---

<u>**இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.**</u>

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**




# ரூ.50 லட்சம் லஞ்சம்: ஓய்வு பெற்ற ஐசிஎப் தலைமைப் பொறியாளர் கைது

**சென்னை,ஜூலை 5:** ரூ.50 லட்சம் லஞ்சம் பெற்ற வழக்கில், ஓய்வு பெற்ற சென்னை ஐசிஎப் முதன்மை தலைமைப் பொறியாளர் கைது செய்யப்பட்டார்.

இது குறித்த விவரம்: சென்னை பெரம்பூர் ஐசிஎப் ரயில் பெட்டித் தொழிற்சாலையில் முதன்மை தலைமைப் பொறியாளராக இருந்தவர் ஏ.கே.கத்பால். இவர் இந்த பொறுப்பில் கடந்த 2019 பிப்ரவரி மாதத்தில் இருந்து கடந்த மார்ச் மாதம் வரையில் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

பணியில் இருந்த காலக்கட்டத்தில் கத்பால், சென்னையைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவன நிர்வாகியுடன் சேர்ந்து பல்வேறு வகைகளில் லஞ்சம் பெற்றுள்ளார். குறிப்பாக ஒப்பந்த புள்ளி கோருவதிலும், வழங்குவதிலும் முறைகேடு செய்து லஞ்சம் வாங்கியிருப்பதாக சிபிஐ லஞ்ச ஒழிப்புத்துறைக்கு புகார்கள் வந்தன.

அதேபோல கத்பால், தனியார் நிறுவன நிர்வாகியை தனக்கு லஞ்சம் பெற்றுத் தரும் முகவராகவே பயன்படுத்தி வந்துள்ளார். இதில் அந்த நபர் மூலமாக மட்டும் ரூ.5.89 கோடி லஞ்சமாக பெற்றிருப்பதாகவும் சிபிஐக்கு புகார்கள் வந்தன. மேலும் கடைசியாக கத்பால், ஒரு பணிக்கு ரூ.50 லட்சம் பெற்றிருப்பது சிபிஐக்கு தெரியவந்தது.

இது குறித்து சிபிஐ லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் விசாரணை செய்தனர். விசாரணையில் கத்பால், தனியார் நிறுவன நிர்வாகி மூலம் தில்லியில் உள்ள அவரது சகோதரரிடம் ரூ.50 லட்சம் லஞ்ச பணத்தை கைமாற்றியிருப்பது தெரியவந்தது. மேலும் இந்த வழக்குத் தொடர்பாக கத்பாலை சிபிஐ அதிகாரிகள் கைது செய்தனர். மேலும் 4 பேரை பிடித்து விசாரணை செய்து வருகின்றனர்.

## 23 கிலோ தங்கம், ரூ.2.75 கோடி பறிமுதல்

கத்பால், தனியார் நிறுவன நிர்வாகிகள் மீது சிபிஐ அண்மையில் வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்குத் தொடர்பாக சென்னை, தில்லி உள்ளிட்ட 9 இடங்களில் உள்ள கத்பாலுக்கு சொந்தமான இடங்களில் சிபிஐ அதிகாரிகள் சோதனை செய்தனர். இச் சோதனையில் அங்கிருந்த ரூ.2.75 கோடி ரொக்கம், 23 கிலோ தங்கம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

**நேர்மை நெறி- ஜுலை-‘2021**

| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |
|---|---|

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20




# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர்: ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 July 2021
Due to corona published online)

**எத்துனை ஆனாலும் ஈதல் நன்று**

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**

AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, “Nambakam” Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர் இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!